2006 ஆகஸ்ட் 29]

குட்டைகளில் இருந்தவர்களுக்குக்கூட, தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே பட்டா வழங்கப்பட்டது என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

வேலூர் கோட்டை

***1105—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டையை அழகுபடுத்தி, சுற்றுலாத் துறைமூலம் பொழுதுபோக்குப் பூங்கா அமைத்து, கோட்டையின் அகழியில் படகுகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். வேலூர் கோட்டை, மைய தொல்பொருள் ஆய்வுத் துறையால் ஒரு வரலாற்றுச் சின்னமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, வேலூர் கோட்டையில் Amusement park அமைக்க மற்றும் அகழியை ஆழப்படுத்த, தொல்பொருள் ஆய்வுத் துறையின் அனுமதி பெற, சுற்றுலாத் துறையின்மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுதியாக அனுமதி பெறப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, வேலூர் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். முதல் சுதந்திரப் போர் வெடித்த இடமே அந்த இடம்தான். அந்தக் கோட்டை அகழியில், நான்கு பக்கம் அகழி என்று சொன்னால், இரண்டு பக்க அகழியில் மட்டும் தண்ணீர் தேக்கி வைக்கிறார்கள். மீதம் இரண்டு பக்க அகழியிலே தண்ணீர் தேக்கி வைக்கப்படாமல், அப்படியே கோரையை வளர்க்கிறார்கள். அந்தப் பகுதியிலும் நீரை நிரப்பி, சுற்றுலாத் துறைமூலம் படகு

[2006 ஆகஸ்ட் 29

விடலாம், அதேபோல அங்கே Amusement park அமைக்கலாம். ஊட்டி ஏரியைச் சுற்றி, குழந்தைகள் எல்லாம் விளையாடக்கூடிய உபகரணங்களை எல்லாம் வைத்து Amusement park வைத்திருக்கிறார்கள். அதேபோல சுற்றுலாத் துறைமூலம் அமைச்சர் அவர்கள் 5 கோடி ரூபாயிலே அது நிறைவேற்றப்படும் என்று நேற்று இந்த அவையிலே அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்கு ஏற்ப மத்திய அரசோடு பேசி, உடனடியாக அனுமதி பெற்று, இந்த ஆண்டே—ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கோட்டையில் படகுகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்—சுற்றுலாத் துறையின்மூலம் இப்போதே படகு இயக்குவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. ஆகவே, உடனடியாக சுற்றுலாத் துறைமூலம் வேலூர் கோட்டை அகழியிலே படகு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா; மத்திய அரசோடு உடனடியாகப் பேசி, 5 கோடி ரூபாயில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டையை அழகுபடுத்தி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகளும் கருத்துருக்களும் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்களும் அனுமதி தருகிறேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டிற்குள் பணிகள் தொடங்கப்படும்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேலூர் கோட்டையை, அழகுபடுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை, இன்னும் அங்கே உருவாகாததற்குக் காரணமே, சுற்றுலா அலுவலர் மாமல்லபுரத்திலே இருக்கிறார். ஒரேயொரு Assistant–ஐ மட்டும் போட்டு, ஒரு சின்ன Office–ஐ அங்கே திறந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு சுற்றுலா அலுவலகத்தை அந்த இடத்திலே திறந்து, சுற்றுலா அலுவலரை, மாமல்லபுரத்தில் இருப்பதற்கு அங்கே தனியாக ஒரு அலுவலரைப் போட்டுவிட்டு, வேலூரிலே ஒரு அலுவலரை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

2006 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தில் ஒன்று, சுற்றுலாத் தகவல் மையமும் அடங்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது படகு விடக்கூடிய கேள்வி என்ற காரணத்தால், மேட்டூர் அணை, தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான அணை. இந்த அணையில் படகு விடப்பட வேண்டும் என்று சுற்றுலாப் பயணிகள் நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிலும், மேட்டூர் அணைப் பூங்கா பராமரிக்கப்படாமல், கடந்த 7, 8 ஆண்டுக் காலமாக உல்லாசப் பயணிகள் எல்லாம்கூட அங்கே செல்ல அனுமதியில்லாமல் இருந்தது. இப்பொழுது பயணிகள் அனுமதிக்கப்பட்டு, அனுமதிச் சீட்டுக் கட்டணமும் கூடுதலாக வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மேட்டூர் அணைப் பூங்காவைப் பராமரித்து, அதேநேரத்தில் அணையில் படகு சவாரி செய்வதற்கும் இங்கே சுற்றுலாத் துறையின் மூலமாகக் கூடுதலாக நிதியொதுக்கி, அதைச் சுற்றுலா மையமாக எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மேட்டூர் அணையில் படகு விடக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபடும். துறையினுடைய அதிகாரிகளை அழைத்து, தேவையா என்பதையும் கருத்தில் எடுத்து, ஆய்வு செய்யப்பட்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட இந்தியாவில் ஃபதேப்பூர் சிக்கிரி, செங்கோட்டை என்று பல

கோட்டை சுற்றுலாத் தலங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றன. அதேபோல, செஞ்சிக்கோட்டைக்குப் பல ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். ஆனால், மலைமீது ஏறி கோட்டைக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்ற காரணத்தால், அதற்கு Rope Car அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோட்டையைப் பொறுத்தமட்டில், மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுதான் அதை ஏற்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

115—

யானைக்கால் நோய்

***870—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யானைக்கால் நோயை ஒழிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) இந்நோய் வராமல் தடுக்க மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) யானைக்கால் நோய்த் தாக்கம் அதிகமுள்ள மாவட்டங்களில், இந்த நோய் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்கவும், இந்த நோயின் உபாதைகளான, கை, கால் வீக்கம் மற்றும் விரை வீக்கம் ஆகியன ஏற்படாமல் தடுக்கவும், 1994 ஆம் ஆண்டு முதல் கடந்த ஏழு ஆண்டுகளாக மத்திய அரசு மற்றும் மாநில அரசு இணைந்து செயல்படுத்தும் இத்திட்டத்தின்படி, ஆண்டுக்கு ஒரு முறை நோய் பரவலாக உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைவருக்கும்